1982 மார்ச் 23]

## இடைப்பாடி நகரிலுள்ள மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 620 திரு. இ. கணேசன்—மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைப்பாடி நகரில் உள்ளவர்களுக்கு போதுமான அளவிற்கு மருத்துவமனை வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம்எனில், மருத்துவமனையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இம்மருத்துவமனையை விரிவு படுத்துவதற்கான காலி நிலம் நகராட்சியால் மருத்துவத்துறைக்கு சட்டபூர்வமாக மாற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இக்காலி நிலம் நகராட்சியால் சட்டபூர்வமாக மாற்றப்பட்டவுடன் இம்மருத்துவமனையை விரிவு படுத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. இ. கணேசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இடப்பாடி மருத்துவமனை 1937 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட . அன்று கண்ட மேனிக்கு அழிவு இல்லை என்பார்களே அதைப் போல, அந்த மருத்துவமனை எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறது. இன்றைக்கு இடப்பாடி நகரத்தில் சுமார் 40,177 பேர்கள் 1981ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு படி இருக்கிறார்கள். அந்த இடப்பாடி நகரத்தை ஒட்டியிருக்கிற அந்த மருத்துவமனைக்கு அருகாமையில் உள்ள இடப்பாடி ஒன்றியப்பகுதியில் சுமார் 25,000 மக்களுக்கு மேல் இருக்கிறது. அந்த மக்களும் இந்த மருத்துவமனையை நம்பித்தான் இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அதை விரிவுபடுத்த அரசு முயற்சிக்குமா என்பதை நான் பணிவோடு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இடப்பாடியில் இருந்து வந்து இருப்பதால் அந்த ஊரைப்பற்றி எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் 1–11–72 ஆம் நாளன்று அந்த மருத்துவமனையை அரசு ஏற்றுக் கொண்டது. அதுவரையில் அது பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரியாக இருந்தது. அந்த மருத்துவமனையை அரசாங்கம் எடுத்துக் கொண்டு பிறகு 10 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக அதை விஸ்தரித்தது. அதற்குப் பிறகு இன்னும் கொஞ்சம் இடம் இருந்தால் அதை மேலும்

விஸ்தரிக்க முடியும் என்கிற வகையில், இடத்தைக் கொடுங்கள் என்று முனிசிபாலிட்டியிடம் கேட்டோம். முனிசிபாலிட்டி கொடுப்பதற்குத் தயாராக இருந்தது. ஆனால் அந்தப் பகுதியில் சிலபேர் என்கரோச்மென்ட் செய்து விட்ட காரணத்தால், அந்த இடத்தை கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். அவர்களை அப்புறப்படுத்துவது என்பது இயலாத காரியமாக இருப்பதால் அந்த என்கரோச்மென்ட் தவிர வேறு பகுதியை அரசாங்கத்திற்குக் கொடுத்து விட்டால் அங்கே மருத்துவ மனையை விஸ்தரிக்க முடியும் என்று சொல்லி இருக்கிறோம். அந்த நடவடிக்கைகள் இப்போது நடந்து வருகின்றன.

திரு இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின் போது நான் அமைச்சர் அவர்களிடம் இதே கேள்வியைக் கேட்கிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்த இடத்திலே இன்னொரு ஆக்கிரமிப்பு இருக்கிறது என்றும், அதை உடனடியாக அகற்றி அதை விரிவு படுத்த அரசு முயலும் என்றும் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இதுவரை அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை விரிவுபடுத்துவதற்கான எந்தவிதமான திட்டமும் இல்லை. தயவு கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆக்கிரமிப்பை அகற்றவும், அந்த ஆஸ்பத்திரியை விரிவு படுத்தவும் முயற்சியை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : உடனடியாக அந்த முயற்சியை அரசு எடுக்கும்?

## பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதி.

*வினா எண். 126—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டையில் உள்ள இந்திய மருத்துவக் கல்லூரியில் மாணவர் விடுதி வசதிக்குறைவுகளுடன் இயங்கிவருகிறது என்பது உண்மையா?

(ஆ) விடுதிக்கான கட்டிடம் புதிதாகக் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் தனித்தனியாகக் கட்ட ஏற்கெனவே ஆணையிடப்பட்டு, கட்டிடப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.